NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu,* p3
**Date:** 29 December 2018

செய்திக்கொத்து

## தனியார் வீட்டு விலை இறக்கம்

கட்டி முடிக்கப்பட்ட தனியார் அடுக்குமாடி வீடுகள் மற்றும் கூட்டுரிமை வீடுகளின் விலை நவம்பரில் 0.4% குறைந்தது. மாத அடிப்படையில், அக்டோபரில் இந்த இறக்கம் 0.6% ஆக இருந்தது. சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் சிங்கப்பூர் குடியிருப்பாளர் விலைக்குறியீட்டுப் புள்ளிவிவரங்கள் இதனைத் தெரிவித்தன. மத்திய பகுதியில் கட்டப்பட்டு உள்ள, சிறிய வீடுகளைத் தவிர இதர அடுக்குமாடி வீடுகளின் விலை 1% குறைந்தது. அக்டோபரில் இந்தக் குறைவு 0.4% ஆக இருந்தது.

இதர பகுதிகளில் வீடுகளின் விலை, சிறிய வீடுகளை நீக்கிவிட்டு பார்க்கையில் நிலையாகவே இருந்தது. சிறிய வீடுகளின் விலை அக்டோபரில் 0.4% கூடியது. நவம்பரில் இவற்றின் விலைகள் 0.4% குறைந்தன. சிறிய வீடுகள் 506 சதுர அடிக்குக் குறைவான பரப்பளவைக் கொண்டவை.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.